

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.11.2023) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா சந்தித்து, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு (TANTEA) 20 சதவீதம் போனஸ் மற்றும் தினமும் வழங்கப்படும் ஊதியத்தை 438 ரூபாயாக உயர்த்தி வழங்கிட உத்தரவிட்டமைக்காகவும் நன்றி தெரிவித்து, தான் எழுதிய "பெரியார் அம்பேத்கர் – இன்றைய பொருத்தப்பாடு" என்ற புத்தகத்தை வழங்கி வாழ்த்துப் பெற்றார்.

அமெரிக்க டாலருக்கு எதிரான

## இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.83.34 ஆக சரிவு!

சென்னை,நவ.11-

ஃபெடரல் ரிசர்வ் தலைவர் ஜெரோம் பவல் கடுமையான கருத்துக்கள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆதரவை விலக்கிக் கொண்டதைத் தொடர்ந்து அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சியில் முடிந்தது.

அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு 5 காசுகள் சரிந்து ரூ.83.34ஆக இருந்தது. ப்ளூம்பெர்க் தரவுகளின்படி, இது (வியாழக்கிழமை) ரூ.83.29ஆக முடிவடைந்தது.

இன்ட்ராடேயில், இது 21 பைசா குறைந்து, அமெரிக்க டாலருக்கு எதிராக இதுவரை இல்லாத அளவு ரூ.83.50ஐ எட்டியது. செப்டம்பர் 5ஆம் தேதி 35 பைசா சரிந்ததிலிருந்து ஒரே நாளில் ஏற்பட்ட மிகக் கடுமையான சரிவு இதுவேயாகும்.



நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம், நடுஹட்டி பகுதியிலிருந்து குன்னூர் வரை புதிய பேருந்து சேவையினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.உமாமகேஸ்வரி, கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தலைவர் ராம்குமார் உட்பட பலர் உள்ளனர்.

அமைச்சர் கா.ராமச்சந்திரன், பா.மு.முபாரக் முன்னிலை!

# நீலகிரி மாவட்ட தி.மு.க. உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கூட்டம்!

## கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

உதகை, நவ. 11 -

நீலகிரி மாவட்டத்திலுள்ள மாவட்ட ஊராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி மன்றம் போன்ற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம், மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில், கழக தேர்தல் பணி செயலாளரும், சுற்றுலாத்துறை அமைச்சருமான கா.ராமச்சந்திரன் முன்னிலையில் உதகையில் நடைபெற்றது, உதகை நகர செயலாளர் ஜார்ஜ் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா கலந்து கொண்டு, எதிர்வரும் 2024ல் உள்ளாட்சி பிரதிநிதிகள் மேற்கொள்ள வேண்டிய நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து சிறப்புரை யாற்றினார். நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்ட துணைச் செயலாளர் ரவிகுமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், காசிலிங்கம், திராவிடமணி, Expoசெந்தில், ராஜு, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் பொன்தோஸ், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வாசிம் ராஜா, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஷ்குமார், நகர செயலாளர்கள் ராமசாமி, இளஞ்செழியன் பாபு,சேகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் லியாகத் அலி, பரமசிவன், காமராஜ், லாரன்ஸ், சிவானந்தராஜா, நெல்லை கண்ணன், பிரேம்குமார், பீமன், சுஜேஷ், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, சதக்கத்துல்லா, பில்லன், தொரை, உதயதேவன், ஷீலாகேத்ரின், மோகன்குமார், வீரபத்திரன், ராஜேந்திரன், செல்வம், ராஜா, காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், சதீஷ்குமார், நடராஜன், சுந்தரராஜ், முத்து, சின்னவர், சுப்ரமணி, சஞ்சீவ்குமார், ரமேஷ்குமார், காளிதாஸ், கண்டோன்மென்ட் நகரிய செயலாளர் மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் இமயம் சசிகுமார், கோமதி, விவேகானந்தன், வெங்கடேஷ், ராஜா, காந்தல் ரவி, எல்கில் ரவி, ஆல்வின், ஆலன், ராம்குமார், சீனிவாசன், ஜெயகுமார், ராமச்சந்திரன், ரஹமதுல்லா, சிவசுப்ரமணியம், ஜெயந்தி, செல்வராஜ், சுரேஷ், செந்தில்நாதன், பவிஷ், உமாநாத், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நவுபுல், பாபு, நாகராஜ், முரளிதரன், வினோத்குமார், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ராம்குமார், சுனிதா, கீர்த்தனா, மாயன், நகராட்சி தலைவர்கள் வாணீஸ்வரி, ஷீலா கேத்ரின், பரிமளா, சிவகாமி, பேரூராட்சி தலைவர்கள் கௌரி, கலியமூர்த்தி, சத்தியவாணி, ஹேமாமாலினி, பேபி, ராதா, ஜெயகுமாரி, சித்ராதேவி, வள்ளி, பங்கஜம் மற்றும் அனைத்து வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட துணைச் செயலாளர் ரவிகுமார் நன்றி கூறினார்.

# திருவாரூரில் சட்டப்பேரவை செயலாக்க நூலக ஆய்வுக்கூட்டம்!

## நூலகக் குழுத் தலைவர் மாதவரம் எஸ்.சுதர்சனம்-பூண்டி.கே.கலைவாணன் பங்கேற்பு!

திருவாரூர்,நவ.11-

திருவாரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை செயலாக்க நூலகக்குழு ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை நூலகக்குழுத் தலைவர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில்நடைபெற்றது.

சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலை வாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, சட்டமன்ற பேரவை நூலகக்குழு உறுப்பினர்கள் க.கணபதி, வே.சம்பத்குமார், கே.எஸ்.சரவணக்குமார், க. மாரிமுத்து எம்.எல்.ஏ.,ஆகியோர் முன்னிலை வகித்தனர் .

பின்னர் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை நூலகக்குழு தலைவர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, திருவாரூர்; மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை செயலாக்க நூலக்குழு ஆய்வுக்கூட்டம்,நடைபெற்றது. இந்த ஆய்வுக்கூட்டத்தில் நூலகங்களின் வகை மற்றும் விவரங்கள், நூலக வரி வசூல் மற்றும் நிதி நிலைமை, நூலக வளர்ச்சிப் பணிகள், மாவட்ட மைய நூலக சிறப்பு பணிகள், குழுவிற்கு வைக்கப்படும் பரிந்துரைகள், நூலகங்களின் முகவரிகள், மற்றும் மாநில அரசு திட்டம் போன்ற பல்வேறு பொருளடக்கங்கள் இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

திருவாரூர் மாவட்டத்திலுள்ள நூலகங்களை பெரிதப்படுத்தி, வாசகர் வட்டங்களை அதிகப்படுத்தி, நூலகங்கள் மக்களுக்கும், மாணவர்களுக்கும் அதிகபடியாக பயன்பெறுவதற்கான நிலையினை உருவாக்குவதுதான் எங்களுடைய நோக்கமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நூலகங்களுக்காக அதிக முக்கியத்துவத்தை அளித்து வருகிறார்கள். கடந்த ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எனக்கு பரிசளிக்கும் போது பூங்கொத்தோ, சால்வையோ வேண்டாம் நூல்களையே பரிசாக அளியுங்கள் என்று கூறியுள்ளார்கள். அதனடிப்படையில், வரப்பெற்ற நூல்களை பல்வேறு நூலகங்களுக்கும், சிறைசாலை களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. ஆகவே இலவசமாக, கொடையாக அளிக்கப்பட்ட பல்லாயிரக்கான நூல்கள் தமிழகத்தின் நூலகங்களை அலங்கரித்து கொண்டிருக்கின்றன மேலும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தொகுதிக்கு ஒரு நூலகம் உருவாக்க வேண்டும் என்று ஒரு லட்சம் கொடையாக இளைஞர் அணி பணம் கொடுத்து, அந்நூலகத்திற்கு மாதந்தோறும் வாடகை தருகின்ற வகையிலும், அவருக்கு வருகின்ற நூல்களையும் கொண்டு அந்நூலகங்களை உருவாக்கி கொண்டு இருக்கிறார். இப்படி நூலகங்களுக்கு அதிக முக்கியத்துவத்தினை தமிழக அரசு வழங்கி வருகிறது.

முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சியிலும் நூலகங்கள் உருவாக்க வேண்டும், மக்களிடையே வாசிப்புத் திறனை அதிகரிக்க வேண்டும் என திட்டங்கள் தீட்டினார். கடந்த ஆண்டுகளில் திருவாரூர் மாவட்டத்தில் 250 நூலகங்களில் பழுதுநீக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், 110 நூலகங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி பயன்பாட்டில் இல்லாத பழைய நூலகங்களும், வாடகை கட்டடங்களில் இயங்கிவரும் நூலகங்க ளும், இடம் வசதி இல்லாத நூலகங்களும் உள்ளது என இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் தெரிய வந்துள்ளது. அதற்கான பணிகளும் விரைந்து முடிக்கப்படும்.

ஊராட்சிகளில் நூலகத்தில் புரவலர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. இந்த எண்ணிக்கை அதிகரித்து அதிகளவிலான புரவலர்கள் கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நூலகம் என்பது பல்வேறு சிந்தனைகள் ஒரே இடத்தில் வைத்து, எல்லோருக்கும், எல்லா விதமான நூல்களும், மக்களுக்கு பயன்படு கின்ற வகையிலான நூல்களும் அடங்கியது. மேலும், நூலகத்திற்கான வரியினை நிலுவையில்லாமல் செலுத்த வேண்டும்.

இன்றைய தினம் நூலகங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டத்தில் நூலகங்க ளில் போட்டித்தேர்வுகளுக்காக படிக்கும் மாணவர்களிடம் ஆலோசித்தப்போது அவர்களுக்குத் தேவையான வசதிகளை கோரிக்கையாக வைத்தனர். குடிநீர் வசதி, ஜெனரேட்டர் வசதி, கலந்துரையாடலுக்கன தனியறை கோரிக்கைகளை திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் உடனடியாக நிறைவேற்றி தந்துள்ளார். மேலும், திருவாரூர் மாவட்டத்திற்காக நடமாடும் நூலகங்கள், புரவலர் கள் எண்ணிக்கை அதிகப்படுத்துதல் போன்ற தீர்மானங்கள், வைக்கப்பட்டுள்ளது, நன்னிலத்தில் 3500 சதுர அடி மற்றும் திருவாரூரில்; 4500 சதுர அடியில் அனைத்து வசதிகளுடன் அறிவுசார்மையம் விரைவில் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரும் என தமிழ்நாடு சட்டமன்ற பேரவை நூலகக்குழு தலைவர் எஸ்.சுதர்சனம் தெரிவித்தார்.

தொடர்ந்து, நகராட்சி, பேரூராட்சி, உள்ளாட்சி துறைகளில் நிலுவையிலுள்ள நூலக வரி ரூ.1,25,98,897, வசூல் செய்வது குறித்து ஆய்வு செய்யப்பட்டதில் ரூ.9,35,8074 வசூல் செய்யப்பட்டதற்கான காசோலை தொடர்புடைய துறை அலுவலர்களால் குழுத்தலைவரிடம் அளிக்கப்பட்டது. மேலும், வாடகை கட்டிடத்தில் இயங்கிவரும் நூலகங்களுக்கு நிரந்தர நூலக கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவும், சுகாதார வசதி இல்லாத நூலகத்திற்கு சுகாதார வசதி ஏற்படுத்தவும் குழுவினரால் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை செயலக நூலகக்குழு மாவட்ட மைய நூலகத்தினை குழுவினர் ஆய்வு செய்தனர். அங்கு மாணவ, மாணவியருக்கு நூல்கள் குழுவினரால் வழங்கப்பட்டது. பின்னர், குடவாசல் வட்டம், சிமிழி ஊர்ப்புற நூலகத்தினையும், நீடாமங்கலம் முழுநேர கிளை நூலகத்தினையும் குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர்.

மாவட்ட ஊராட்சி துணை தலைவர் சேகர் கலியபெருமாள் ,நகர்மன்ற புவனப்பிரியா செந்தில்,நகர செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ் ,நூலகர் ஆசைதம்பி, செல்வகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கே.பி.சங்கர் தலைமை ! ஏகா.கார்த்திகேயன், பா.பாலஉமாபதி நிகழ்ச்சி ஏற்பாடு !

# திருவொற்றியூரில் சுற்றுச்சூழல் அணி சார்பில் நீட் விலக்கு கையெழுத்து இயக்கம் !

## பழசெல்வகுமார் முன்னிலையில் கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, நவ.11

திராவிட முன்னேற்றக் கழக சுற்றுச்சூழல் அணி சார்பில் சென்னை வடகிழக்கு மாவட்ட திருவொற்றியூர் தொகுதியில் மருத்துவ படிப்பு நுழைவுத் தேர்வு நீட் எதிராக கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, கலந்து கொண்டு சுற்றுச்சூழல் அணியின் மாநில துணைச் செயலாளர் பழ.செல்வகுமார்,5வது வட்ட மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் வி.இராமநாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆர்.முருகேசன், எஸ்.எஸ்.நாகலிங்கம், சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன் குமார், கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஏகா.கார்த்திகேயன், பா.பாலஉமாபதி, ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்திருந்தனர்.

இந்நிகழ்வில் சென்னை வடகிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பி.வெங்கடேசன், சென்னை வடக்கு மாவட்ட அமைப்பாளர் எம்.தீனதயாளன், மாவட்ட பிரதிநிதிகள் பி.எஸ்.சைலஸ், கே.கார்த்திகேயன், எம்.அப்துல் சலீம், குட்டி (எ) எத்திராஜ், பி.சந்தானகிருஷ்ணன், முன்னாள் பகுதி துணைச் செயலாளர் ஈ.ரமேஷ், பண்ணை சந்திரசேகர்,மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கு.தமிழ் மணி, பிரட்.சுரேஷ்,

மகிழன், சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகள் த.சுதர்சன், சி.இளஞ்செழியன், வேதா.செந்தில், சிவதனுஸ், கே.தேசிங்கு, தொழிலதிபர் எம்.தயாநிதி,கழகப் பேச்சாளர் போட்டோசெந்தில், மேற்கு பகுதி மாணவர் அணி அமைப்பாளர் பாலச்சந்தர்,கிழக்குப் பகுதி மீனவர் அணி துணை அமைப்பாளர் எம்.எல்.வேலன்,டி.ராதா, தங்கவேல், எம்.கார்த்திக்,மணலி வசந்தராஜ், தன்ராஜ், சிவகங்கபுரம்.சங்கர், சோமசுந்தரம், கொள்கைமணி, டைலர் பாபு, தொ.மு.ச.ராஜவேல், லோகு,சண்முகம், சௌந்தர், டி.இ.பரணிகுமார், இரா.கணேசன், அணில்குமார்,ரவி, சிவா,சலக்ஷா, சாரதிபாலாஜி, சி.தினேஷ், வி.இந்திரேஷ், சிவ.வினோத், எம்.புருஷோத்தமன், ரமேஷ்,பாரூக்பாய், வைகை சிவா,கோபி கிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பண்ருட்டி மணி
### நவம்பர் 11 (1999)



பண்ருட்டி நகரக் கழகச் செயலாளராகவும் – சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த மொழிப் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு 21 முறை சிறை சென்றவர்.

மிசாவில் கைதாகி சென்னை மத்திய சிறையில் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்.

"நிமிர்ந்து நின்றால் வேங்கைப்புலி! சிரித்தால் ஒரு செழிப்பு! பேசினால் ஒரு நேசம், பாசம்! அந்த உருவம் என் கண்ணைவிட்டு என்றும் மறையாது" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில்

# ஆட்டோ ஓட்டுனர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, நவ. 11

சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில் ஆட்டோ ஓட்டுனர்களுக்கு நலத்திட்ட உதவிகள் இன்று (11.11. 2023, சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் அசோக்நகர் 7-வது நிழற்சாலையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி பங்கேற்று நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சிக்கு அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் கோடம்பாக்கம் மு.பாஸ்கர் தலைமை வகிக்கிறார். மாவட்ட துணை அமைப்பாளர் மு.சரவணன் முன்னிலை வகிக்கிறார்.

சிறப்பு விருந்தினராக தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, தியாகராயர் நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை, 135-வது வட்டக் கழக செயலாளர் எம்.எஸ். பழனி, கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் மாநிலத் துணைச் செயலாளர் எஸ்.ராம்குமார், ஆர்.டி. உதயசூரியன், சென்னை தென்மேற்கு மாவட்ட அமைப்பாளர் வி.சத்தியமூர்த்தி, மாவட்ட தலைவர் தி.நகர் இ.மூர்த்தி, மாவட்ட துணை தலைவர் ஆர்.கண்ணன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் தி. நகர் பி.பார்த்திபன், த. சங்கர், ஜெ.சசிகுமார், எஸ். சேகர் மற்றும் அமைப்பு சாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

சிங்கம்புணரி பேரூர் முன்னாள் செயலாளர்

# இரா.அ.கா.சிவஞானம் 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி!

## கழகத்தினர் அஞ்சலி!



சிவகங்கை, நவ. 11-

சிங்கம்புணரி பேரூர்க் கழக முன்னாள் செயலாளரும், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் தனி பணியாளர் கரு.செயல் மணியின் சம்பந்தியுமான இரா.அ.கா.சிவஞானம் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சி இன்று (11.11.2023 - சனிக்கிழமை) அன்னாரது இல்லத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சிங்கம்புணரி பேரூர்க் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழகச் செயல் வீரர்கள் கலந்துகொண்டு அன்னாரது திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை திருவான்மியூர் சாலை விபத்தில் உயிரிழந்த தூய்மைப் பணியாளர் திருமதி சிவகாமி என்பவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் வழங்கிட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (10.11.2023) ஒக்கியம், துரைப்பாக்கம், கண்ணகி நகரில் உள்ள உயிரிழந்தவரின் இல்லத்திற்கு நேரில் சென்று ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை அன்னாரது குடும்பத்தாரிடம் வழங்கி, ஆறுதல் கூறினார். இந்நிகழ்வில் துணை மேயர் மு.மகேஷ்குமார், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், மண்டலக்குழுத் தலைவர் வி.இ.மதியழகன், தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) என்.மகேசன், மாமன்ற உறுப்பினர் திருமதி க.அஸ்வினி ஆகியோர் உடனிருந்தனர்.